IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**M.C. 2/2023 Date : 12.06.2025. P.W. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.பிரேமா | ஆதார் எண் | |
| தந்தை பெயர்: | தங்கராஜ் | தொழில் | ஜெராக்ஸ் கடையில் வேலை |
| கிராமம் | ஆசனூர் | வயது | 39 |
| எதிர்மனுதாரர் ஆஜர், வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என் கணவரான எதிர்மனுதாரர் எனக்கு உறவினர், மாமா முறை என்றால் சரிதான். நான் சிறு வயது முதல் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு போய் வரும் பழக்கம் உண்டு என்றால் இல்லை. நான் 10 ம் வகுப்பு என் பாட்டி, தாத்தா வீட்டில் இருந்து படித்தேன். என் தாத்தா, பாட்டி வீடு குணமங்கலம் ஆகும். அதன்பிறகு நான் மும்பை சென்றுவிட்டேன்.

2. நான் சிறு வயது முதல் எதிர்மனுதாரர் வீட்டிற்கு போய் வரும் பழக்கம் உண்டு என்று எதிர்மனுதாரர் சொல்கிறார் என்றால் சரியல்ல. நான் உள்ளூரில் இருந்தபோது மாற்றுதிறனாளியாக இருந்த ஒரு நபரை நான் காதலித்தேன் என்றால் இல்லை. நான் மும்பையிலிருந்து வந்தபிறகு நான் காதலித்த மாற்று திறனாளியை திருமணம் செய்து வைக்குமாறு எதிர்மனுதாரரிடம் நான் கேட்டேன் என்றால் சரியல்ல.

3. நான் எதிர்மனுதாரரின் வீட்டிற்கு போய் வந்த பழக்கத்தால் தான் மாற்று திறணாளியை சேர்த்து வைக்குமாறு எதிர்மனுதாரரிடம் கேட்டேன் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் எனது தாயார் மல்லிகா, எதிர்மனுதாரரிடம் சொல்லி உளுந்தூர்பேட்டையிலுள்ள அபிராமி டைப்ரைட்டிங் இன்ஸ்டியூட்டில் சேர்த்தார் என்றால் சரியல்ல.

4. அந்த சமயத்தில் நான் பள்ளியில் படிக்கும்போது எதிர்மனுதாரருக்கு நெஞ்சுவலி வந்து உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் அவருடன் இருந்தேன் என்றால் சரியல்ல. 2007 ம் வருடம் எனக்கும், எதிர்மனுதாரருக்கும்

திருமணம் நடைபெற்றது. எனக்கும், எதிர்மனுதாரருக்கும் 10, 15 வருடம் வயது வித்தயாசம் இருக்குமா என்றால் தெரியவில்லை.

5. என் தாத்தா பாட்டி வீட்டிற்கு வந்தபோது திருமணம் நடைபெற்றது. எங்கள் திருமணத்தை என் தாத்தா, பாட்டி, உறவினர்கள் நடத்தி வைத்தார்கள். திருமணத்திற்கு பிறகு உளுந்தூர்பேட்டையில் வசித்தோம். நான் ஜெராக்ஸ் கடைக்கு வேலைக்கு சென்று மாதம் ரூ.4,500/- சம்பளம் பெறுகிறேன். நான் மாதம் ரூ.20,000 ம் சம்பாதிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. டைப்ரைட்டிங் எனக்கு தெரிந்தவகையில் அதன் மூலமாகவும் மொத்தம் ரூ.20,000 ம் மாதம் சம்பாதித்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் ஆரம்பத்தில் ராமஜெயம் ஜெராக்ஸ் கடையில் வேலை பார்த்து பின்பு திருப்பதி டிஜிட்டல் ஸ்டுடியோவில் வேலை பார்த்தும், தற்சமயம் விநாயகா பத்திரப்பதிவு அலுவலகத்தில் வேலை பார்த்து வருவதால் என் வாழ்க்கைக்கு போதுமான ஊதியம் பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல.

7. 2007 ம் வரும் எதிர்மனுதாரருக்கு நெஞ்சில் அடைப்பு ஏற்பட்டு ஆஞ்சியோ கிராம் செய்யப்பட்டது என்றால் 2007 ல் இல்லை. 2009 ம் வருடம் தான் ஜிப்மர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். நான் தற்சமயம் எலவனாசூரகோட்டையில் அரசு மருத்துவமனைக்கு எதிரில் ஒரு வாடகை வீடு எடுத்து நானும், எனது மகனும் மட்டும் தங்கி வருகிறோம்.

8. நான் 2019 ம் வருடத்திலிருந்தே எலவனாசூர்கோட்டையில் குன்னத்தூர் கிராமத்தை சேர்ந்த கலியபெருமாள் மகன் வெங்கடேசன் என்பவருடன் திருமணம் கடந்த உறவில் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நானும், எதிர்மனுதாரரும் பிரிந்து 8 வருடங்கள் ஆகிறது. எதனால் பிரிந்தோம் என்றால் எதிர்மனுதாரர் அடிக்கடி குடித்துவிட்டு வந்து பிரச்சனை செய்வார்.

9. நான் ராமஜெயம் ஜெராக்ஸ் கடையில் வேலை செய்தபோது, மணிமாறன் என்பவருடன் திருமணம் கடந்த உறவில் இருந்ததால், அது தெரிந்து எதிர்மனுதாரர் கேட்டதால் பிரச்சனை ஏற்பட்டு பிரிந்துவிட்டோம் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு நாங்கள் பாலக்கொல்லையில் இருந்தோம் என்றால் ஆமாம். அங்கு எதிர்மனுதாரரின் முதல்மனைவி மங்கை, அவர்களுக்கு பிறந்த மூன்று குழந்தைகள் ஆகியோருடன் நானும், வசித்து வந்தேன் என்றால் எனக்கு எதிர்மனுதாரருடன் திருமணம் ஆகும்போது அவர்கள் அங்கு இல்லை.

10. எதிர்மனுதாரரின் முதல் மனைவி மக்கள் எப்போது வந்தார்கள் என்றால் எதிர்மனுதாரருக்கு 2009 ல் உடம்பு சரியில்லாமல் இருந்தபோது தான் வந்தார்கள். வந்தபிறகு அவர்களுடன் எனக்கு பிரச்சனை ஏற்பட்டது. என் திருமணம் ஊர் அறிய பத்திரிக்கை அடித்து செய்யப்பட்டது. பத்திரிக்கையில் உறவினர்களின் பெயர் போடவில்லை என்றால் முக்கியமானவர்களின் பெயர் மட்டும் போடப்பட்டது.

11. பொதுவாக கிராமங்களில் உறவினர்கள் அனைத்து பெயரும் போட்டு தான் பத்திரிக்கை அடிப்பார்கள் என்றால் என் தாத்தா பாட்டி பத்திரிக்கை அடித்தார்கள். அதனால் எனக்கு அதுபற்றி தெரியாது. ம.சா.ஆ.1ல் என்னுடைய அப்பா, அம்மா மற்றும் எதிர்மனுதாரருடைய அப்பா, அம்மா ஆகியோர்களின் பெயர் மட்டுமே உள்ளது என்றால் சரிதான். இவ்வாறு ஒரு பத்திரிக்கையே அடிக்கவில்லை என்றும், வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

12. எங்கள் திருமணம் என் உறவினர்களுக்கு தெரியும், எதிர்மனுதாரரின் உறவினருக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிர்மனுதாரர் மருத்துவமனையில் இருந்தபோது அவருடன் நான் இரவில் இருந்தேன் என்றும், அப்போது அவர் மீது காதல் வயப்பட்டு, அவரை கட்டாயப்படுத்தி திருமணம் செய்ய வைத்தேன் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரர் மருத்துவமனையில் இருந்தபோது நான் மும்பையில் இருந்தேன்.

13. எதிர்மனுதாரரின் உறவினர் யாருக்கும் தெரியாமல், எங்கள் உறவினர்களை மட்டும் வைத்து சமயபுரத்தில் திருமணம் செய்துகொண்டேன் என்றால் அவர்களின் உறவினர்களும் திருமணத்திற்கு வந்திருந்தனர். எதிர்மனுதாரருக்கு முதல் திருமணம் நடந்த விஷயத்தி என்னிடம் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை.

14. எனக்கு எல்லா விவரங்களும் தெரியும் என்றும், எதிர்மனுதாரருக்கு நான் நெருங்கிய உறவினர் என்றும், அவர் வீட்டிற்கு அடிக்கடி சென்று வருவேன் என்பதால் அவருக்கு நடைபெற்ற முதல் திருமணம் பற்றி எனக்கு தெரியும் என்றும், தற்போது வழக்கிற்காக தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

15. திருமணத்திற்கு பிறகு பாலக்கொல்லையில் ஒரே வீட்டில் முதல்மனைவி மற்று அவரது பிள்ளைகளுடன் தங்கியிருந்தேன் என்றால் சரியல்ல, என் இரண்டாவது மகன் பிறந்த பிறகு தான் எதிர்மனுதாரரின் முதல் மனைவி மற்றும் பிள்ளைகள்

வந்தார்கள். என் அம்மா வீடு கட்டுவதற்கு எதிர்மனுதாரர் ரூ.3,66,000 ம் ரொக்கமாகவும், வீடு கட்டுவதற்கு தேவையான சிமெண்ட், ஜல்லி, மணல் ஆகியவற்றை எதிர்மனுதாரர் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல.

16. எனக்கு திருமணம் ஆனவுடன் எதிர்மனுதாரர் 3 செண்ட் இடத்தை வாங்கி கொடுத்தார் என்றால் இல்லை, என் தகப்பனார் வாங்கி கொடுத்தார். 3 செண்ட் இடத்தை எதிர்மனுதாரர் தான் வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் வீட்டைவிட்டு செல்லும்போது அனைத்து நகைகளையும் நான் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டேன் என்றால் இல்லை, எனது அனைத்து நகைகளையும் எதிர்மனுதாரர் அடகு வைத்துவிட்டார்.

17. நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், எதிர்மனுதாரரின் நகைகளையும் நான் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. நான் வெங்கடேசன் என்பவருடன் தொடர்பில் இருந்ததாக உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் விசாரணைக்கு வரும்படி சொன்னார்களா என்றால் அது பொய்யான புகார் என்பதால் நான் விசாரணைக்கு செல்லவில்லை. அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் என்னை அழைத்து கண்டித்து அனுப்பினார்கள் என்று சொன்னால் சரியல்ல.

18. வெங்கடேசன் என்பவருடன் உளுந்தூர்பேட்டையிலுள்ள பெங்களூர் பர்னிச்சர் கடையின் உரிமையாளரின் வீட்டில் குடும்பம் நடத்தினேன் என்றால் நானும், எனது மகனும் தான் இருந்தோம். நான் பொய்யாக சொல்கிறேன் என்றும், இது சம்மந்தமாக எதிர்மனுதாரர் நேரில் பார்த்து கேட்டபோது பிரச்சனை ஆகி உளுந்தூர்பேட்டை சட்ட ஒழுங்கு காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் நானும், என் மகனும் வீட்டில் இருந்தபோது, சுமார் 60 நபர்களுடன் வந்து பிரச்சனை செய்தார்கள். விசாரணையில் புகார் பொய்யானது என்று முடிக்கப்பட்டது.

19. வெங்கடேசன் தான் என் கணவர் என்று சொல்லி பெங்களூர் பர்னிச்சர் கடையின் உரிமையாளரின் வீட்டை வாடகைக்கு எடுத்தேன் என்று அவர் எதிர்மனுதாரரிடம் சொன்னார் என்றால் சரியல்ல. அந்த பிரச்சனையால் தான் வீட்டை காலி செய்ய சொன்னார்கள் என்றால் வீட்டின் உரிமையாளர் காலி செய்யவேண்டாம் என்று தான் சொன்னார். அப்போது என் மகன் 10 ம் வகுப்பு படித்துகொண்டு இருந்ததால் மீண்டும் எதிர்மனுதாரர் வந்து பிரச்சனை செய்வார் என்பதால் நான் என் அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

20. தற்போது என் அம்மா வீட்டில் இருக்கிறேனா என்றால் இல்லை. நானும், என் மகனும் வாடகை வீட்டில் குடியிருக்கிறோம். நான் எதிர்மனுதாரரின் சட்டப்படியான மனைவி இல்லை என்றும், அதனால் எதிர்மனுதாரரிடம் ஜீவனாம்சம் கோர எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் போதுமான அளவிற்கு சம்பாதிப்பதால், எதிர்மனுதாரர் இருதய நோயால் பாதிக்கப்பட்டு இருப்பதாலும், ஏற்கனவே முதல்மனைவி பிள்ளைகளுக்கு சாப்பாட்டிற்கு வழி இல்லாமல் இருக்கிறார் என்பதால் ஜீவனாம்சம் கொடுப்பதற்கு வசதி இல்லை என்பதால் நான் தாக்கல் செய்திருக்கும் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

(S/d.V.Gomathi)
Judicial Magistrate-I,
Ulundurpet.

typed by r.rasathilagam